**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**முன்னிலை: திரு. இரா. இராஜசேகரன், எல்.எல்.எம்,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர், குன்னம்.**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07-ஆம் நாள் சனிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.12/2024 இல்</u>**

**<u>இடைநிலை மனு எண்.5/2025</u>**

சீத்தாபதி ... மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி

/எதிர்/

அஞ்சலை ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 07.02.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.துரை.பெரியசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.V.ஸ்ரீராதிகா தேவி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவானது மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆணை 9 விதி 7 பிரிவின் கீழ் மனுதாரர்/1 ஆம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் கடந்த 08.01.2025 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :</u>**

2. மனுதாரர் தனது மனுவில் தான் அசல் வழக்கில் 1 ஆம் பிரதிவாதி என்றும், எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வழக்கு கடந்த 08.01.2025 ஆம் தேதி அன்று வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், தனக்கு ஆறுமாத காலமாக மஞ்சள் காமாலை ஏற்பட்டு உடல்நிலை முடியாமல் போய்விட்டது என்றும், தான் காரியப்பட்டிக்கு சென்று நாட்டு வைத்தியம் பார்த்து பச்சிலை சாப்பிட்டு உடல்நிலை ஓரளவு சரியாகியுள்ளதாகவுட்ம, வழக்கு பற்றி தன் வழக்கறிஞரிடம் வந்து 06.02.2025 ஆம் தேதி விவரம் கேட்டபோது தான் வழகில் எதிர்வழக்குரை தாக்கல்

செய்யாததால் கடந்த 08.01.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரிய வந்ததாகவும், தன் உடல்நிலை மஞ்சள் காமாலை கண்டு இருந்த காரணத்தால் தன்னால் மேற்படி தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், இது வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல என்றும், விவரம் தெரிந்தவுடன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்வழக்குரையையும் இத்துடன் தாக்கல் செய்வதாகவும், வழக்குச் சொத்துக்கள் முழுவதும் தன் தந்தைக்கு பாத்திப்பட்டது என்றும், வழக்குச் சொத்தில் வாதிக்கு பாக உரிம கேட்க சட்டப்படி உரிமையில்லை என்றும், எனவே, மேற்படி தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி கேட்கப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை சுருக்கம் :</u>

3. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரையில் மனுவின் சங்கதிகளை மறுத்துள்ளதோடு, அசல் வழக்கானது வாதி தரப்பு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த எதிர்வாதி அசல் வழக்கில் தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 24.06.2024 ஆம் தேதியிலேயே முன்னிலையாகிவிட்ட நிலையில் பின்னிட்டு பதிலுரை தாக்கல் செய்யாததால் அவரைப் பொருத்து ஒருதலைபட்சமாக 08.01.2025 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்து சுமார் ஒரு மாதத்திற்கு எந்தவித மனுவும் தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு தற்போது வழக்கு விசாரணை தொடங்கியதும் பதிலுரையுடன் இம்மனுவைத் தாக்கல் செய்திருப்பது ஏற்கக் கூடியதல்ல என்றும், மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி கூறியுள்ள காரணங்கள் ஏற்கக் கூடியதல்ல என்றும், மனுதாரர் மஞ்சள் காமாலை ஏற்பட்டு சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கு எந்தவித ஆவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், முன்னுக்குப் பின் முரணான காரணங்களை அபிடவிட்டில் தெரிவித்துள்ளதாகவும், வழக்கு நடவடிக்கையை தாமதப்படுத்தும் நோக்கத்தில் வேண்டும் என்றே மனுதாரர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோது கடந்த 05.07.2024 ஆம் தேதியில் வழக்குச் சொத்தை தனது மைனர் மகளான சஹானா, சுபாஷினி ஆகியோருக்கும், தன் மனைவியான முருகாம்பாளை கார்டியனாக காட்டி வாலிகண்டபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம்

எண்.3048/2024 ஆக பதிவு செய்துள்ளதாகவும், அதன் பிறகு கடந்த 22.11.2024 ஆம் தேதியில் GWOP.No.25/2024 மனுவில் மனுதாரர் தரப்பு 2 ஆவது சாட்சியாகமனுதாரர் கடந்த 08.11.2025 ஆம் தேதியில் பெரம்பலூர் மாவட்ட நீதிமன்றத்தில் நேரில் சென்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், ஆனால், மனுதாரர் தனது அபிடவிட்டில் தனக்கு 6 மாத காலமாக மஞ்சள் காமாலை கண்டு உடல்நிலை முடியாமல் இருந்ததாக கூறிவிட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கும், பெரம்பலூர் மாவட்ட நீதிமன்றத்திற்கும் சென்றுள்ளதாகவும், மனுதாரர் அளித்துள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றும், வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளபோது உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆணை 9 விதி 7 மனு தாக்கல் செய்வதை பொருத்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 100 Law Weekly page no.538 இல் சுலோச்சனா அம்மாள் vs. பேபி அம்மாள் என்ற வழக்கில் 9 ஆவது பாராவில் "... But though he has the right to appear at an adjourned hearing he has no right to set back the hands of the clock. Order 9 Rule 7 makes that clear. Therefore, unless he can show good cause, he must accept all that has gone before and be content to proceed from the stage at which he comes in" என்ற முன்தீர்ப்பில் வழக்கு விசாரணை சமயத்தில் ஆணை 9 விதி 7 மனு தாக்கல் செய்வது குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஒருவேலை மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டாலும், வழக்கு எந்த நிலையில் உள்ளதோ அதிலிருந்து தான் மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி வழக்கை தொடர முடியுமே தவிர வழக்கை மீண்டும் பின்னோக்கி கொண்டு செல்ல இயலாது என்றும் தெரிவித்து மனுதாரரின் இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி கேட்கப்பட்டுள்ளது.

**தீர்வுக்குரிய பிரச்சனை :**

4. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? தள்ளுபடியாகத்தக்கதா?

**தீர்வு :**

5. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, மனு, எதிருரை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

6. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது கடந்த 08.01.2025 அன்று இந்த மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக

நிலுவையிலிருந்ததாகவும், மனுதாரருக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டு கடந்த 6 மாத காலமாக தான் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்ததால், தன்னால் நீதிமன்றத்தில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல்போய்விட்டதாகவும், மேற்படி தவறுகை வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, அசல் வழக்கில் இம்மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கறவு செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி வாதிடப்பட்டது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துமூலமான வாதுரையில் மனுவின் சங்கதிகளை மறுத்தும், மனுதாரருக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டு சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கு எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், இடைப்பட்ட காலத்தில் மனுதாரர் வழக்குச் சொத்தை தனது இளவர் குழந்தைகளின் பெயரில் தனது மனைவியை கார்டியனாக காண்பித்து எழுதி வைத்துள்ளதாகவும், அதனை விற்பதை பொருத்து மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு உத்தரவையும் பெற்றுள்ளதாகவும், மேற்படி GWOP.No.25/2024 மனுவில் இந்த மனுதாரர் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளதாகவும், உண்மையான சங்கதிகளுடன் அல்லாமல் வேண்டும் என்றே வழக்கை தாமதிக்கும் நோக்கத்தில் வேண்டும் என்றே எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என வேண்டப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில் கடந்த 08.01.2025 அன்று இம்மனுதாரர்/1ஆம் பிரதிவாதிக்கு எதிராக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள ஆட்சேபணைகளைப் பொருத்து மேற்படி வழக்குச் சொத்தின் வில்லங்க சான்றிதழ் கணினி நகல், GWOP.No.25/2024 மனுவின் கட்டளையாணை கணினி நகல், மேற்படி மனுவில் இந்த மனுதாரர் அளித்துள்ள சாட்சியத்தின் கணினி நகல், மேற்படி வழக்குச் சொத்திற்கான கணினி பட்டா நகல் ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவை இந்த மனுவில் சாட்சி மூலம் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், இந்த மனுவானது எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட

ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி ஆவணங்கள் இந்த மனுவினை தீர்மானிக்க அவசியமான ஆவணங்களாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்படி ஆட்சேபணைகளை இந்த எதிர்மனுதாரரால் அசல் மனுவில் தெரிவிக்க இயலும் என்பதாலும், எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபித்தவாறு மனுதாரர் தான் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கு எந்தவித ஆவணங்களும் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்படவில்லை எனினும், மனுதாரருக்கு அவரது வழக்கை நடத்த உரிய வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. இறுதியாக, மனுதாரரின் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKARAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.02.07 16:39:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>**

இல்லை

RAJASEKARAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.02.07 16:39:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.